# சர்வாதிகாரத்தால் ஜனநாயக நெருக்கடியில் இந்தியா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி..

முதல் பக்கத் தொடர்ச்சி

16 கட்சிகளினுடைய தலைவர்கள் கலந்து கொண்டார்கள். நேற்றும், இன்றும் பெங்களூருவில் நடந்த கூட்டத்தில் 26 கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு பேசியிருக்கிறோம்.

**இந்திய அளவில் கொள்கை கூட்டணி மாநில அளவில் தேர்தல் கூட்டணி!**

தமிழ்நாட்டில் எப்படி கூட்டணி அமைத்து வெற்றியை தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல், இந்தியா முழுமையும், இதுபோன்ற ஒரு கூட்டணி அமைந்து அந்த வெற்றியை காணுவதற்கான வியூகங்கள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது.

அகில இந்திய அளவில், கொள்கை கூட்டணியாக மாநில அளவில் தேர்தல் கூட்டணியாக இது அமையக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

பாட்னாவிலும், அதைத் தொடர்ந்து பெங்களூரிலும் நடந்திருக்கக்கூடிய இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும், என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு பெரிய மகிழ்ச்சி எனக்கு கிடைத்திருக்கிறது. இந்த மகிழ்ச்சி எனக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் நிச்சயமாக நம்பிக்கைத் தரக்கூடிய மகிழ்ச்சியாக அமையும் என்ற நம்பிக்கை நாடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

**அடுத்தகட்ட கூட்டம் மும்பையில் நடைபெறும்!**

அப்படிப்பட்ட ஒன்றிணைந்திருக்கக் கூடிய கூட்டணிக்கு என்ன பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். INDIA அதாவது, Indian National Developmental Inclusive Alliance என்ற அடிப்படையில் அந்தப் பெயர் அமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும், மும்பையில் நடத்துவதாக முடிவெடுத்தி ருக்கிறோம். அப்படி நடக்கக்கூடிய அந்தக் கூட்டத்தில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து அதில் பேசப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, 2024ஐ பொறுத்தவரைக்கும் ஒரு புதிய இந்தியாவாக உருவாகும். அப்படிப்பட்ட ஆண்டாக அது அமையும். அதற்கு உங்களுடைய ஆதரவும், ஒத்துழைப்பும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**யார் ஆட்சியில் இருக்கக் கூடாது என்பதுதான் முக்கியம்!**

**செய்தியாளர்**:- *இன்று உதயமாகியிருக்கக்கூடிய இந்தியா எதிர்கால இந்தியாவிற்கு ஒரு மாற்றத்தை உருவாக்குமா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** :- அதைதான் நான் முன்பே குறிப்பிட்டேனே. கடைசியில் முடிக்கும் போது என்ன குறிப்பிட்டேன். புதிய இந்தியாவாக 2024 அமையும். அதில் எல்லாம் அடக்கம்.

**செய்தியாளர்** :- *கடந்த தேர்தலில் ராகுல் காந்தியை நீங்கள் பிரதமர் வேட்பாளராக அறிவித்து தேர்தலை சந்தித்தீர்கள். இந்த முறை அதற்கான வாய்ப்பு இருக்கிறதா?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**:- அன்றைக்கு இருந்த சூழ்நிலையை பொறுத்தவரை நான் அப்படி குறிப்பிட்டேன். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை பொறுத்தவரைக்கும் யார் ஆட்சியில் இருக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய கொள்கை. அதைத்தான் இன்றைக்கு பேசிக்கொண்டிருக்கிறோம்.

**அமலாக்கத் துறைச் செயல் எதிர்பார்த்ததுதான் சட்டப்படி சந்தித்து வெற்றி காண்போம்!**

**செய்தியாளர்** : - *மிகப்பெரிய நெருக்கடிக்கு திமுக தள்ளப்பட்டிருக்கிறது. அடுத்தடுத்த அமலாக்கத்துறையுடைய நெருக்கடிகளை திமுக எப்படி சமாளிக்கப் போகிறது?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**:- இது எல்லாம் எதிர்பார்த்த ஒன்று தான். இன்னும் போகப்போக இன்னும் பல கொடுமைகள் நடக்கும். அதையும் சந்திக்க தயாராக இருக்கிறோம். அதிலும் நிச்சயம் வெற்றி காண்போம். எல்லாவற்றையும் நாங்கள் சட்ட ரீதியாக சந்திப்பதற்கு தயாராக இருக்கிறோம்.

**செய்தியாளர்**: - *தமிழ்நாட்டில் நடக்கக்கூடிய அமலாக்கத்துறை நடவடிக்கைகள் நியாயமானது தான் என்று பிரதமர் சொல்லியிருக்கிறாரே?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**:- அதாவது, அமலாக்கத்துறையினர் பா.ஜ.க. கூட்டணியில் இருப்பவர்களின் வழக்குகளை பற்றி கண்டும் காணாமல் இருக்கிறார்கள் அல்லவா அதுதான் நியாயமானது. அவரை பொறுத்தவரைக்கும்.

**பிரதமர் மோடி சொல்வது வேடிக்கையாக உள்ளது!**

**செய்தியாளர்**: *தி.மு.க. ஒரு ஊழல் கட்சி, எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறாரே பிரதமர்?*

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**: - இன்றைக்கு நடந்த கூட்டத்தில் பக்கத்தில் யார் யாரை எல்லாம் உட்கார வைத்திருந்தார்கள். பார்த்தீர்களா. அவரால் குற்றஞ்சாட்டப்பட்ட, அவரால் ஊழல்வாதிகள் என்று சொல்லப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு அந்த கூட்டணியில் இடம்பெற்றிருக்கிறார்கள். அவர்களை அவர் அரவணைத்து கொண்டிருக்கிறார். அவர் இதை சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

## பெங்களூரு கூட்டம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது!

---

## பெங்களூருவில் 26 எதிர்க்கட்சிகள் பங்கேற்ற இரு நாள் கூட்டம் நிறைவு!

# ‘இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி’ - ‘I.N.D.I.A.’

## கூட்டணிக் கட்சிகள் ஒருமித்த முடிவாக பெயர் சூட்டினர்!

**பெங்களூரு, ஜூலை 20-**

**பெங்களூருவில் இரண்டாவது நாளாக எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல்காந்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட 26 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். பா.ஜ.கவிற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு** Indian National Developmental Inclusive Alliance **எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசை வீழ்த்துவதற்காக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டுள்ளன. அதன்படி, எதிர்க்கட்சித் தலைவர்களின் முதல் ஆலோசனைக் கூட்டம் பீகார் தலைநகர் பாட்னாவில் கடந்த மாதம் 23 ஆம் தேதி நடைபெற்றது.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் இரண்டாவது ஆலோசனைக்கூட்டம் பெங்களூருவில் நடைபெற்றது. தனியார் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 26 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி, ராகுல் காந்தி, தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர்.

தி.மு.க. பொருளாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான டி.ஆர்.பாலுவும் பங்கேற்றார்.

தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத், பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி, மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, கர்நாடக முதலமைச்சர் சித்த ராமையா, கர்நாடக துணை முதல்வர் சிவகுமார் , ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் ஆகியோரும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவருமான பரூக் அப்துல்லா, சிவசேனா தலைவரும், மகாராஷ்டிரா முன்னாள் முதலமைச்சருமான உத்தவ் தாக்கரே, சமாஜ்வாதி தலைவரும், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், மக்கள் ஜனநாயக கட்சித் தலைவரும், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான மெகபூபா முஃப்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா உள்ளிட்டோரும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**குறைந்தபட்ச செயல்திட்டம் உருவாக்கம்!**

இதேபோன்று, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர்மொய்தீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சித் தலைவர் ஈஸ்வரன் உள்ளிட்ட 26 கட்சிகளின் தலைவர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்தும் வகையில் குறைந்தபட்ச செயல் திட்டம் உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்கள் விரிவாக ஆலோசனை மேற்கொண்டனர்.

“எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைப் பார்த்து பிரதமர் மோடி அஞ்சத் தொடங்கி விட்டார்” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்திற்குப் பின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பா.ஜ.க.விற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு Indian National Developmental Inclusive Alliance என பெயர் சூட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பா.ஜ.க.விற்கு எதிராக ஒருங்கிணைந்துள்ள எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டம் மும்பையில் நடைபெறும் என்றும் அவர் கூறினார். எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு 11 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்படும் என்றும், ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் மும்பைக் கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**பா.ஜ.க. வீழ்த்தப்படுவது உறுதி!**

“ஜனநாயகத்தையும், அரசியல் சட்டத்தையும் காப்பதற்கு ஒன்றிணைந்துள்ளோம்” என்றும் கார்கே தெரிவித்தார்.

“எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையால் பா.ஜ.க. அச்சத்தில் உள்ளது என்றும், நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க., வீழ்த்தப்படுவது உறுதி” என்றும் அவர் தெரிவித்தார்.

“பா.ஜ.க. அரசின் தோல்விகளை பொது மக்களிடம் எடுத்து கூறுவோம்” என்று கூறிய மல்லிகார்ஜுன கார்கே, “எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையைப் பார்த்து பிரதமர் மோடி அஞ்சத் தொடங்கிவிட்டார்” என்று தெரிவித்தார்.

**ராகுல்காந்தி கருத்து!**

இக்கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பெங்களூருவில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் பயனுள்ளதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருந்ததாகத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்துள்ளது பா.ஜ.க.வின் மதவாதத்திற்கு எதிரான போராட்டம் என்றும் தேசத்தைக் காக்க மோடி அரசுக்கு எதிரான செயல்திட்டத்தை எதிர்க்கட்சிகள் உருவாக்கி வருவதாகவும் ராகுல்காந்தி கூறினார்.

நாட்டைக் காப்பாற்றவே இந்தப் போராட்டம் நடைபெறுவதாகவும் ராகுல்காந்தி தெரிவித்தார்.

---

## நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது!

### ஆகஸ்டு 11-ந் தேதி வரை நடைபெறுகிறது!

புதுடெல்லி, ஜூலை 20 –

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கி ஆகஸ்ட் 11ம் தேதி வரை நடைபெற உள்ளது. மணிப்பூர் கலவரம், விசாரணை அமைப்புகளை ஒன்றிய அரசு தவறாகப் பயன்படுத்துவது, தமிழ்நாடு ஆளுநர் விவகாரம், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதால் மழைக்கால கூட்டத்தொடரில் அனல் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த கூட்டத்தொடரின் போதே, எதிர்க்கட்சிகளின் குரல்களுக்கு ஒன்றிய அரசு செவி சாய்க்க மறுத்துவிட்டது.

இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டத்தொடரையொட்டி, அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவை தலைவருமான ஜக்தீப் தன்கர் அழைப்பு விடுத்திருந்தார். பின்னர், அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் டெல்லியில் நேற்று அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இதில் அரசியல் கட்சிகளின் மூத்த தலைவர்கள் பங்கேற்றார்கள்.

---

### எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் அத்துமீறல்கள்!

## நாடாளுமன்ற கூட்டத்தில் விவாதிக்க காங்கிரஸ் வலியுறுத்தும்!

### பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் பேட்டி!

*புதுடெல்லி, ஜூலை 20-*

*எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் அத்துமீறல்கள் குறித்த நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த காங்கிரஸ் கட்சி வலியுறுத்தும் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.*



*ஜெய்ராம் ரமேஷ்*

*டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ், மணிப்பூரில் கடந்த 3 மாதங்களாக நிகழ்ந்து வரும் வன்முறை சம்பவங்கள் விவகாரங்கள் குறித்து நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கேள்வி எழுப்பும் என்று கூறினார்.*

*ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநில அரசுகளை, ஆளுநர்கள் மூலம் கட்டுப்படுத்தும் ஒன்றிய அரசின் நடவடிக்கை குறித்தும் விவாதம் நடத்த வலியுறுத்தப்படும் என்று கூறிய ஜெய்ராம் ரமேஷ், டெல்லி மாநில அரசை கட்டுப்படுத்தும் ஒன்றிய அரசின் அவசர சட்டம் தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் வலியுறுத்தும் என்று குறிப் பிட்டார். இதேபோன்று, அத்தியாவசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, அதானி குழும முறைகேடு விவகாரம் குறித்தும் நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் குரல் கொடுக்கும் என்றும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.*

---

### இந்திய நாட்டின் பன்முகத் தன்மையைக் காக்கும் உறுதியுடன்

## “INDIA” என்ற கொள்கைக் கூட்டணியை அமைத்துள்ளோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 20-

இந்திய நாட்டின் பன்முகத் தன்மையைக் காக்கும் உறுதியாக “INDIA” என்ற கொள்கைக் கூட்டணியை அமைத்துள்ளோம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மதச்சார்பற்ற, ஜனநாயக இயக்கத் தலைவர்களுடன் பெங்களூரில் வரலாற்றுச் சிறப்புமிகுந்த, ஆக்கப்பூர்வமான கூட்டத்தில் கலந்து கொண்டேன். பிரிவினை அரசியலின் கொடும் பிடியில் இருந்து இந்திய நாட்டின் பன்முகத் தன்மையைக் காக்கும் உறுதியுடன் “INDIA” என்ற கொள்கைக் கூட்டணியை அமைத்துள்ளோம். தேசியம் எனும் முகமூடிக்குக் கீழே மறைந்துள்ள எதேச்சாதிகாரவாதிகள் இறுதியில் வீழ்ந்துபடுவார்கள் என்பதைத்தான் வரலாறு காட்டுகிறது. ஒற்றுமைதான் நம் வலிமை, நாம் ஒன்றுபட்டால், இந்தியா வெல்லும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




சென்னை, மாநிலக் கல்லூரி திருவள்ளுவர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (18.07.2023) தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற ”தமிழ்நாடு நாள் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர், ”முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என். எஸ். நாணா என்கிற நாராயணன் (2021), ஏ. ஆரோக்கியதாஸ் (2022) விருதுத்தொகையாக தலா ரூபாய் இரண்டு இலட்சத்திற்கான காசோலையும், தங்கப் பதக்கமும் வழங்கினார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், சமூகநீதிக் கண்காணிப்பு (ம)பாதுகாப்புக் குழுத் தலைவர் சுப.வீரபாண்டியன், தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், ஆழி செந்தில்நாதன் மற்றும் மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் ஆகியோர் உள்ளனர்.